# ‘சண்டியர்’ தப்பு! ‘சாமி’ சரியா?

## கேள்வி : ஞாநி டாக்டர் கிருஷ்ணசாமிக்கு

கமல்ஹாசனின் சண்டியர் படம் இன்னமும் புதுப் பெயரிடப் படாமல் படப்பிடிப்பு தொடங்கிவிட்டது. கமல் ஒன்றும் சமூக சீர் திருத்தவாதியல்ல என்பது நாடறிந்ததுதான். வர்த்தக ரீதியில் வெற்றி பெறுவதும், அதே சமயம் வித்யாசமான உழைப்பின் மூலம் தன் திறமை போற்றப்படுவதில் அக்கறை காட்டுவதும்தான் அவரது தேவைகள். இந்த போக்கில் சில சமயங்களில் அவர் முற்போக்கானவற்றை செய்வதும் சில சமயம் பிற்போக்கானதை செய்வதும் இயல்பு.

சண்டியர் என்ற பெயருக்கு எதிர்ப்பு தெரிவித்த புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி படத்தலைப்பு பற்றிய பிரச்சினை இப்போதைக்கு முடிந்துவிட்டாலும், படம் அரிவாள் கலாசாரத்தை ஊக்குவிப்பதாக இருக்கக் கூடாது என்றும் படம் எடுத்து முடிந்த பிறகு அந்தப் பிரச்சினையை கவனிக்கலாம் என்றும் தெரிவித்திருக்கிறார். எந்த ஊருக்குப் போய் படம் எடுத்தாலும் இங்கேதானே ரிலீஸ் செய்தாக வேண்டும் என்பது அவர் கருத்து.

படம் உருவாவதற்கு முன்னே அதை எதிர்ப்பது, தடுப்பது என்பது நிச்சயம் ஆதரிக்க முடியாத விஷயம். இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டால், நாளைக்கு ஒவ்வொரு எழுத்தாளரையும் பத்திரிகையாளரையும் அடுத்து என்ன கதை/கட்டுரை எழுதப் போகிறாய், அதன் தலைப்பு என்ன? சொல்லிவிட்டு எழுது என்று சொல்ல முடியுமா?

தணிக்கைக் குழு முன்பு படம் வரும்போது சமூக அமைதி, சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை கவனிப்பதுதான் முறை. இதற்கு கிருஷ்ணசாமி தரப்பு வாதம்- தணிக்கை குழு என்று ஒன்று

இருப்பதாகவே தெரியவில்லையே. அவர்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதுதான்.

அப்படியானால் நியாயப்படி கிருஷ்ணசாமி தணிக்கைக் குழுவுக்கு எதிரான போராட்டத்தை அல்லவா அறிவித்து நடத்த வேண்டும்?

அரிவாள் கலாசாரம் பரவக் கூடாது என்று கவலை தெரிவிக்கும் கிருஷ்ணசாமி, சண்டியர் பெயருக்கும் படப்பிடிப்புக்கும் எதிர்ப்பு தெரிவித்த அதே சமயத்தில் ரிலீசாகி ஜே.ஜே என்று ஓடிக் கொண்டிருந்த இன்னும் ஓடிக் கொண்டிருக்கிற படம் 'சாமி'

இந்தப் படம் கிருஷ்ணசாமியின் விசேஷ கவனத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் ஏனோ பெறவில்லை. இந்தப் படத்தின் முதல் விளம்பர ஸ்டில்லே அரிவாள்தான். கதாநாயகன் விக்ரம் பன்னிரண்டு கைகளுடன் ஒவ்வொரு கையிலும் அரிவாள் முதல் வகை வகையான ஆயுதங்களுடன் நிற்கும் ஸ்டில். இந்தப் படத்தின் கதை நடப்பது கிருஷ்ணசாமியின் இயக்கத்துக்கு முக்கியமான பகுதியான திருநெல்வேலியில்.

கதாநாயகன் போலீஸ் அதிகாரி. ஆனால் அவன், எந்த சாதி என்று சொல்லப்படாத ஒரு சாதி சங்கத்தினரின் போராட்டத்தைத் தடுக்க, தானே அரிவாளும் உருட்டுக்கட்டையும் எடுத்து வருகிறான். அவன் மட்டும் அல்ல. போலீஸ் படையே அரிவாள், கட்டையுடன் வருகிறது. போலீஸ் பொறுக்கியாக நடந்துகொள்வது படம் முழுக்க நியாயப்படுத்தப்படுகிறது. படத்தில் வில்லன் எந்த சாதி, ஹீரோ எந்த சாதி என்று சொல்லப்படாமலே கதை சாமர்த்தியமாக நகர்த்தப்படுகிறது. வில்லன் ஹீரோவும் தன் சாதி தான் என்கிறான். நெல்லையில் எந்தெந்த சாதிகளுக்கிடையே அடிக்கடி கலவரம் மூளும் என்பது கிருஷ்ணசாமிக்கும் பொதுமக்களுக்கும் தெரிந்ததுதான்.

அண்மை வரலாற்றில் நெல்லையில் நடந்த மறக்க முடியாத, மறக்கக் கூடாத ஊர்வலம் கிருஷ்ணசாமி பங்கேற்று நடத்திய மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர் ஊர்வலம்தான். அதில் போலீஸ் அராஜகத்தில் பலர் தாமிரபரணி ஆற்றில் அடித்துத் தள்ளப்பட்டும் மூழ்கியும் செத்த வரலாற்றை 'சாமி' படம் கொச்சைப்படுத்தியிருகிறது. படத்தின் உச்சகட்டமாக நெல்லை நகரில் நடத்தப்படும் ஊர்வலம் வில்லனால் நடத்தப்படுகிறது. வில்லனின் வன்முறையை முறியடிக்க, ஹீரோ - போலீசின் வன்முறை முன்கூட்டியே தொடங்கிவிடுகிறது. போலீஸ் வன்முறை நியாயப்படுத்தப்படுகிறது. சண்டியர் என்று பெயர் வைத்ததற்கே

துள்ளி குதித்த கிருஷ்ணசாமிக்கு ஏன் இந்தப் படம் கண்ணுக்கே தெரியவில்லை? இப்படி ஒரு கேவலமான படத்தை கிருஷ்ணசாமி கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

அரிவாள் கலாசாரத்தைப் பரப்புவது ஆபத்தானது என்று சொல்லும் கிருஷ்ணசாமிகளுக்கு, தொடர்ந்து தமிழ் சினிமாவில் பெண்களைப் பாட்டிலும் நடனத்திலும் கதையிலும் கேவலப்படுத்திக் கொண்டிருப்பது தவறானது என்று ஏன் உறைக்கவில்லை? சாமி படத்தில் ஹீரோயினுடைய குண்டியின் க்ளோசப்பில்தான் டூயட் தொடங்குகிறது. "கேனா புனா" என்று ஹீரோ பேசும் வசனம். இதன் விரிவு என்ன என்பது தமிழ் வசவுகள் தெரிந்த எல்லாருக்கும் தெரியும். அது அல்ல, இது கேனப் புண்ணாக்கு என்று விரிவாக விளக்கம் வேறு. கூடவே அப்ப அந்த அர்த்தம் இல்லியா என்று நினைவூட்டும் வசனம் காமெடியனுக்கு.

தமிழ் சினிமாவுக்கு சிகிச்சை செய்யப் புறப்பட்டிருக்கும் அரசியல் டாக்டர்களின் முயற்சியை நிச்சயம் வரவேற்க வேண்டும். ஆனால் அது மேம்போக்கானதாக, சாதி சார்ந்ததாக மட்டும் இருக்கக் கூடாது. முதலில் பெண்களைக் கேவலப்படுத்தும் அத்தனை சினிமா பாடல்கள், வசனங்கள் முதியவற்றை எழுதும் கவிஞர்கள், கதாசிரியர்கள், இயக்குநர்கள், இவற்றை கண்டுகொள்ளாமல் இருப்பதற்காக அரசு ஊதியம் பெறும் தணிக்கை அதிகாரி ஆகியோருக்கு எதிராகப் போராட்டததை நடத்தட்டும். எடுத்து வெளியாகி மக்கள் ஆதரவுடன் ஓடிக் கொண்டிருக்கும் படங்களைக் கண்டுகொள்ளாமல், இன்னும் எடுக்கப்படாத படம் பற்றிப் பேசுவது திசை திருப்பும் வேலை.

***தீம்திரிகிட, ஜூலை 2003***

**ஒரு பின்குறிப்பு: 2013-ல் சண்டியர் என்ற தலைப்பில் ஒரு படம் வெளிவந்தது. கிருஷ்ணசாமி உட்பட யாரும் அதை கண்டுக் கொள்வில்லை!**

# பீ! இந்தியா ஒளிர்கிறது? ஒரு சமகால ஆவணம்

## விடாது கருப்பு கருத்து

*அதிர்ச்சியூட்டும் இந்தத் தலைப்பிலான ஒரு குறும்படத்தைப் பார்த்ததும் பல உணர்வுகள் மனதில் எழுந்தன.*

*மதுரையைச் சேர்ந்த இளைஞர் ஆர்.பி.அமுதன் இதற்கு முன்பு எடுத்த 'காவிரி துரோகமும் துயரமும்' என்ற குறும்படத்தை பார்த்திருக்கிறேன். அது என்னை ஈர்க்கவில்லை. அத்தகைய படங்களின் வழக்கமான தடத்திலும் வடிவத்திலுமே அது இருந்தது ஒரு காரணம்.*

*பீ! குறும்படம் தமிழகம் முழுவதும் ஓர் இயக்கமாகத் திரையிடப்பட்டுக் காட்டப்படவேண்டிய படம். ஒரே ஒரு நபர்தான் காமிராவை எடுத்துக்கொண்டு போய் இன்னொரு நபரை பதிவு செய்கிற எளிய வடிவ முறையிலேயே, எந்த அளவுக்கு பார்வையாளர்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திவிடலாம் என்பதற்கு பீ ஓர் சிறந்த எடுத்துக்காட்டுப்படம்.*

*பல குப்பைக் குறும்படங்களையும் அவற்றை உருவாக்கி யவர்களையும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடும் தமிழக குறும்படச் சூழலில் நிச்சயமாக தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாட வேண்டிய படம் பீ!*

*அசல் பீயை தினசரி தன் தலையில் சுமந்துகொண்டு பணியாற்றும் மாரியம்மாளின் காலை மூன்று மணி நேர வேலையைப் படம் பதிவு செய்கிறது. மதுரையில் ஒரு கோவில் சந்துப் பகுதியில் தெரு முழுக்க பொது மக்கள் இருபுறமும் கழித்து வைத்திருக்கும் மலத்தை, தினசரி காலை 6 முதல் 9 வரை, கூட்டி, சாம்பல் தெளித்து அள்ளி, கூடையிலிட்டு, அந்தக் கூடையைத் தன்*

தலையில் சுமந்து எடுத்துக்கொண்டு போய் லாரியில் கொட்டும்வரை மாரியம்மாளுடனே இருக்கிறது காமிரா.

ஆயிரக்கணக்கான துப்புரவத் தொழிலாளர்களில் ஒருவரான மாரியம்மாளின் அன்றாட காலைப் பொழுதில் சுப்ரபாதங்கள் சைக்கிள் பிராண்ட் ஊதுபத்திகளுக்கு பதிலாக இந்த சமூகத்தின் நாற்றம் கவிந்திருப்பதை இந்த 26 நிமிடக் குறும்படம் பார்க்கும் எவரும் உணராமல் இருக்க இயலாது. படத்தில் எந்தப் பிரசார, ஆக்ரோஷ, உணர்ச்சிவசமான பேச்சுக்களும் இல்லை. படம் முழுவதும் அமுதனும் மாரியம்மாளும் சாதாரணமாக உரையாடியபடியே அவரவர் வேலையை செய்கிறார்கள். அவர் பீ அள்ளுகிறார். இவர் படம் பிடிக்கிறார். இந்தப் பதிவு மனசாட்சியுள்ள எந்த பார்வையாளர் மனதையும் உலுக்குவதாக அமைந்திருக்கிறது.

கம்ப்யூட்டர் முதல் சேட்டிலைட் சேனல் வரை ஒளிர்கிற இந்தியாவில் மாரியம்மாள்கள் ஏன் இன்னமும் பீ அள்ளிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வியை படம், பார்ப்பவர் மனதில் நிச்சயம் எழுப்பிவிடும்.

புதிய பார்வையாளர்களிடம் இந்தப் பிரச்சினையை எடுத்துச் செல்ல மாரியம்மாள் பீ அள்ளும் காட்சிகள் உதவாமல் அன்னியப்படுத்திவிடும் என்ற கருத்தையும் இதேபோல் ஒரு பாலியல் தொழிலாளியின் ஒரு நாள் வேலையை படம் பிடித்துக் காட்டினால் என்ன விளைவை ஏற்படுத்தும் என்ற கேள்வியையும் நிழல் திரைப்பட இதழில் வெளிவந்த விமர்சனம் எழுப்பியிருந்தது. இது வக்கிரமான வெளிப்பாடே தவிர நியாயமான விமர்சனம் அல்ல.

சாதாரண மனதில் கிளுகிளுப்பை ஏற்படுத்தக்கூடிய பாலுறவைக் காட்டாமல்தான் அதன் தொழிலாளியின் வலியை உணர்த்த வேண்டும். சாதாரண மனதில் அருவெறுப்பை ஏற்படுத்தக் கூடிய மலம் அள்ளுதலைக் காட்டித்தான் அந்தத் தொழிலின் கொடுமையை உணர்த்த முடியும்.

இந்தக் குறும்படம் என் கைக்குக் கிடைத்த நொடியிலிருந்து அடுத்த இரண்டு நாட்கள் என் வீட்டுக்கு வந்த பல இளைஞர்கள் பெரும்பாலும் திரைப்படக் கல்லூரி மாணவர்கள், ஆண், பெண் இருபாலருக்கும் படத்தைப் பல முறைப் போட்டுக் காண்பித்தேன். தொழில்நுட்ப அறிவில் திளைக்கும் சூழலிலிருக்கும் அந்த மாணவர்கள் அத்தனை பேரையும் நெகிழ வைத்தது இந்த எளிமையானபடம்.

*கடைசியாக மாரியம்மாளை விடவும் தாழ்ந்த பொருளாதார நிலையில் இருக்கும் எங்கள் வீட்டுப் பணியாளர் கோவிந்தம்மாளுக்கு படத்தைக் காட்டினோம். கோவிந்தம்மாள் தினசரி அதிகாலையில் சுமார் இரண்டு கிலோமீட்டர் நடந்து வந்து எங்கள் பகுதியில் வீட்டு வேலை செய்பவர். படம் பார்த்து விட்டுச் சொன்னார், அவளுக்கு பேட்ஜ் இருக்குது. மூவாயிரம் ரூபாய் சம்பளம் கிடைக்குது. செத்தா வீட்டுக்கு கவர்ன்மெண்ட்டுல லட்ச ரூபா குடுப்பாங்க? என்னை மாதிரியா? என்றார். இதெல்லாம் கிடைக்க ஏற்படு செய்தால். அந்த வேலைக்குப் போகத் தயாரா என்று கோவிந்தம்மாளைக் கேட்டேன்.*

*நான் ஏன் அந்த வேலை செய்யணும். அதுக்குன்னுதான் அந்த ஜாதி இருக்குது. அவங்கதான் செய்யணும் என்றார். பிறகு நெடு நேரம் கோவிந்தம்மாளுடன் ஜாதி பற்றி உரையாடினோம். அவர் தன் நிலையிலிருந்து துளிக்கூட மாறத் தயாராயில்லை. அந்தக் காலத்துல பெரியவங்க இதெல்லாம் ஏற்படுத்தினது தெரியாமலா? உங்களுக்கு தான் சாங்கியமெல்லாம் கிடையாது. நான் விட்டுட முடியுமா என்றார். கோவிந்தம்மாளுக்கு அவருக்கு மேலடுக்கில் இருக்கும் ஜாதிகள் அவரை இழிவாக நடத்துவது பற்றியும் எந்த நெருடலும் இல்லை. அதெல்லாம் அப்படித்தான் இருக்குது. அப்படித்தான் இருக்கணும் என்பது அவர் நிலை.*

*பீ படத்தை ஏழெட்டு முறை பார்த்தபோது கூட உணராத ஒரு மலநாற்றம் கோவிந்தம்மாள் பேச்சிலிருந்து வந்து எங்களைத்தாக்கியது. வர்க்க ஒற்றுமைக்குப் பெரும் தடையாக இருப்பது ஜாதிதான் என்பதை இன்னொரு விதத்தில் உணர்ந்தோம்.*

*மனிதனை மனிதன் அடிமையாக நடத்துவதை எதிர்க்கும் போராட்டத்தில் அமுதனின் படம் இன்னொரு ஆயுதம்.*

*பீ! பரவட்டும்!*

*(குறும்படம் திரையிட விரும்புவோர் தொடர்புகொள்ள மறுபக்கம் 127/147 மல்லிகை மலர் தெரு, மகாத்மா காந்தி நகர், மதுரை - 14)*

***தீம்திரிகிட மார்ச் ஏப்ரல் 2004***